©
தமிழ்நாடு அரசு
2025

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 1.60 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 37] சென்னை, புதன்கிழமை, செப்டம்பர் 17, 2025
புரட்டாசி 1, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056

## பகுதி II—பிரிவு 1 இன் இணைப்பு

## அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை**

**அறிவிக்கைகள்**

*[அரசாணை (நிலை) எண்.53, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (I2)த் துறை, 3 ஜூன் 2025.]*

1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பினையும் பணி நிலைமைகளையும் முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், ஆலோசனைக்குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத்திட்டத்தில் பின்வரும் திருத்தங்களை இதனால் மேற்கொள்கிறார்.

**திருத்தங்கள்**

மேற்சொன்ன திட்டத்தில்,

(1) பகுதி 15–இல்,

(a) உட்பகுதி (1) இல் உள்ள அட்டவணையில், நெடும்பத்தி (1) இல் தொடர் எண் 12 மற்றும் அது தொடர்பாக பொருந்துகிற பதிவுகளுடன், பின்வரும் தொடர் எண் மற்றும் அது தொடர்பாக பொருந்துகிற பதிவுகள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். அவையாவன;–

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| "13 | EE (2) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் / நிறுவனங்களில் முழுநேர முனைவர் பட்டத்திற்கான ஆராய்ச்சிப் படிப்பை மேற்கொண்டு வருதல் (3 ஆண்டுகளுக்கு மட்டும்) | 15,000 | 15,000 | 15,000 | 15,000" |

(b) உட்பகுதி (3–a) க்குப் பின்னர். பின்வரும் உட்பகுதி சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். அதாவது:

(c) "(3–b) பாடப்பிரிவில் சேர்க்கையை நிறைவு செய்த பின்னர் அல்லது பதிவு செய்த பின்னர், தொடர் எண் 13 இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வி உதவித் தொகையைப் பெறுவதற்கான விண்ணப்பம். அட்டவணை II இல் உள்ள படிவம் EE (2) இல் அளிக்கப்பட வேண்டும்.

(2) அட்டவணை II இல், படிவம் EE (1) க்குப் பின்னர், பின்வரும் படிவம் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும், அதாவது:–

## படிவம் EE (2)

[பகுதி 15 (1) (3-b)ஐக் காண்க]

**அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் / கல்வி நிறுவனங்களில் முழுநேர முனைவர் பட்டத்திற்கான ஆராய்ச்சிப் படிப்பை மேற்கொள்ளும் மாணவர்களின் கல்வி உதவித் தொகைக்கான**

**விண்ணப்பம்**

பெறுநர்

தொழிலாளர் நல உதவி ஆணையர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்)

.................................மாவட்டம்.

1. பதிவுபெற்ற உடலுழைப்புத் தொழிலாளரின் பெயர்

2. (a) பதிவெண் மற்றும் முதல் பதிவின் நாள்

(அசல் அடையாள அட்டை இணைக்கப்பட வேண்டும்)

(b) இறுதியாக புதுப்பிக்கப்பட்ட நாள், புதுப்பிக்கப்படும் நாள் வரையிலான கால அளவு குறிக்கப்பட வேண்டும்.

3. அஞ்சல் குறியீட்டு எண்ணுடன் முகவரி (முழுமையாக)

4. பதிவுபெற்ற உடலுழைப்புத் தொழிலாளரின் குடும்ப உறுப்பினர்கள் பற்றிய விவரங்கள்

| *தொ.எண்* | *பெயர்* | *பதிவுபெற்ற உடலுழைப்புத் தொழிலாளருடனான உறவு முறை* | *வயது* |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* |
| | | | |

5. கல்வி உதவித் தொகை கோரும் மகன் அல்லது மகளின் விவரங்கள்:–

| *தொ. எண்* | *பெயர்* | *பிறந்த நாள்* | *பயிலும் பாடப்பிரிவின் பெயர்* | *படிப்பின் கால அளவு* | *முழுமையான முகவரியுடன் பல்கலைக்கழகத்தின் நிறுவனத்தின் பெயர்* |
|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* | *(6)* |
| | | | | | |

**குறிப்பு:–** பதிவுபெற்ற உடலுழைப்புத் தொழிலாளரின் கல்வி பயிலும் மகன் அல்லது மகள் ஆராய்ச்சிக் கல்வியை மேற்கொள்ளும் காலகட்டத்தில் வீட்டில் தங்கி கல்வி நிலையம் சென்று படிப்பை மேற்கொள்கிறாரா அல்லது விடுதியில் தங்கியிருந்து கல்வி நிலையத்தில் படிப்பை மேற்கொள்கிறாரா என்பதைக் குறிக்கும் சான்றிதழ், ஆராய்ச்சி படிப்புக்கான வழிகாட்டி / நிறுவனத்தின் முதல்வரிடமிருந்து பெற்று அசலாக இணைக்கப்பட வேண்டும்.

6.வாரியத்திலிருந்து ஏற்கெனவே கல்வி உதவித்தொகை பெற்றுள்ள, குழந்தைகளின் விவரங்கள்:–

| *தொ. எண்* | *பெயர்* | *மகன் / மகள்* | *கல்வி உதவித் தொகை கோரப்படும் பாடப்பிரிவு* | *கல்வி உதவித் தொகை பெறும் ஆண்டு* | *கல்வி உதவித் தொகை (:ரூ.)* |
|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* | *(6)* |
| | | | | | |

## 7. தகுதிக்கான நிபந்தனைகள்:–

(i) விண்ணப்பதாரர்கள் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவுபெற்ற உறுப்பினரின் குழந்தைகளாக இருக்க வேண்டும்.

(ii) குறைந்தளவு 55 மதிப்பெண்களுடன் முதுகலை பட்டப்படிப்பு சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

(iii) துறைத் தலைவர் அல்லது தொடர்புடைய பல்கலைக்கழகம் அல்லது இணைப்பு பெற்றுள்ள கல்லூரிகளின் முதல்வர் மற்றும் ஆராய்ச்சிப் படிப்புக்கான வழிகாட்டியிடமிருந்து தகுதிச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

(iv) தொடர்புடைய கல்வியாண்டிற்கான ஆராய்ச்சிப் படிப்பு ஆலோசனைக் குழுவின் அறிக்கையை அளிக்க வேண்டும்.

(v) விண்ணப்பதாரர்கள் வேறு எந்தத் திட்டத்தின் கீழும் முனைவர் பட்டத்திற்கான கல்வி உதவித்தொகையைப் பெற்றிருக்கக் கூடாது.

### விண்ணப்பதாரரின் உறுதிமொழி*

மேலே அளிக்கப்பட்டுள்ள விவரங்கள் நான் நன்கு அறிந்தவரையில் சரியானவையெனவும் உண்மையானவையெனவும் இதனால் உறுதியளிக்கிறேன். மேலே அளிக்கப்பட்டுள்ள தகவல்களில் ஏதேனும் தவறானது எனக் கண்டறியப்படுமாயின், எனக்கு / என்னுடைய மகளுக்கு / மகனுக்கு உதவித் தொகையாகப் பெறப்பட்ட தொகையை முழுமையாகத் திருப்பியளிப்பதென இதனால் ஒப்புக்கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட வேறு எந்த நல வாரியங்களிடமிருந்தும் அல்லது வேறு எந்த வாரியத்திடமிருந்தும் அல்லது ஏனைய யாதொரு அரசுத் திட்டங்களின் கீழும் இத்தகைய சலுகைகளைப் பெறவில்லை என்பதையும் இதனால் தெரிவிக்கிறேன்.

இடம்:

நாள்:

பதிவுபெற்ற உடலுழைப்புத்
தொழிலாளரின் கையொப்பம் / பெருவிரல் ரேகை,

*எந்தவொரு தவறான அறிவிப்பு சான்றிதழும் சட்ட நடவடிக்கைக்கு உட்பட்டதாகும்.

### சான்றிதழ்

விண்ணப்பத்தில் வழங்கப்பட்ட விவரங்கள் சரியானவை என்று இதனால் சான்றளிக்கிறேன்.

இடம்: உறுப்பினர்கள், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் / தொடர்புடைய பதிவுபெற்ற தொழிலாளர் சங்கத்தின் தலைவர் / செயலாளர்/தொடர்புடைய தொழிலாளர் உதவி ஆய்வாளர் / வேலைவாய்ப்புச் சான்றிதழ் வழங்க அனுமதிக்கப்பட்ட ஏனைய யாதொரு அதிகாரி.

நாள்:

*எந்தவொரு தவறான அறிவிப்பு/சான்றிதழ் சட்ட நடவடிக்கைக்கு உட்பட்டதாகும்.

**ஒப்பளிப்பு ***

பதிவுபெற்ற உடலுழைப்புத் தொழிலாளர் (பதிவு எண்... திரு / திருமதி ..............என்பவரின் *மகன்/*மகள் ஆகிய செல்வன்/ *செல்வி..................என்பவரின் கல்வி உதவிக்காக ரூ.........../– ரூ.......... ...மட்டும்) தொகையை உரிய சரிபார்ப்புக்குப் பின்னர் இதனால் ஒப்பளிக்கிறேன்.

அலுவலக முத்திரை:

இடம்: தொழிலாளர் உதவி ஆணையர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்)

நாள்: ...............................மாவட்டம்.

"பொருந்தாதவற்றை அடித்துவிடவும்".

**அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண். 55, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (I2)த் துறை, நாள். 03.06.2025]*

1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பையும் பணி நிலைமைகளையும் முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத்திட்டத்தில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார். அதாவது:

**திருத்தம்**

மேற்சொன்ன திட்டத்தில், பகுதி 15 இன் உட்பகுதி (1) இல், அட்டவணையில் நெடும்பத்திகள் 1 இல் 6, 7, 8 மற்றும் 9 ஆம் தொடர் எண்களுக்கு நிகரான பதிவுகள் மற்றும் அவற்றுக்குத் தொடர்புடைய நெடும்பத்திகள் (2) (3) (4) மற்றும் (5) –இல் உள்ள நிகரான பதிவுகளுக்குப் பதிலாக, பின்வரும் பதிவுகள் முறையே அமைத்துக்கொள்ளப்பட வேண்டும். அவையாவன:–

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| "6 | EE | நேரடி இளநிலைப் பட்டப்படிப்பு பயில்வோர் (ஒவ்வொரு கல்வியாண்டிற்கும்) | 5,000 | 5,000 | 5,000 | 5,000. |
| 7 | EE | நேரடி முதுநிலைப்பட்டப் படிப்பு பயில்வோர் (ஒவ்வொரு கல்வியாண்டிற்கும்) | 5,000 | 5,000 | 6,000 | 6,000 |
| 8 | EE | தொடர் எண் 12 இல் உள்ள தொழில்முறைப் பாடப்பிரிவுகள் நீங்கலாக, சட்டம், பொறியியல், மருத்துவம், கால்நடை மருத்துவம் மற்றும் தொடர்புடைய பாடப்பிரிவுகளில் நேரடி தொழில்முறை படிப்பு பயில்வோர். (ஒவ்வொரு கல்வியாண்டிற்கும்) | 5,000 | 5,000 | 7,000 | 7,000 |
| 9 | EE | தொடர் எண் 12 இல் உள்ள தொழில்முறைப் பாடப்பிரிவுகள் நீங்கலாக, சட்டம். பொறியியல், மருத்துவம், கால்நடை மருத்துவம் மற்றும் தொடர்புடைய பாடப்பிரிவுகளில் நேரடி முதுநிலைத் தொழில்முறை படிப்பு பயில்வோர் (ஒவ்வொரு கல்வியாண்டிற்கும்) | 7,000 | 7,000 | 9,000 | 9,000 |

**K. வீர ராகவ ராவ்,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர் (மு.கூ.பொ),*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.